2004 பிப்ரவரி 5]

'அனைவருக்கும் கல்வி' என்கிற Sarva Siksha Abhiyan திட்டத்தில்கூட அதனைச் சேர்க்க வேண்டுமென்று முயற்சி எடுத்தோம். நடக்கவில்லை. ஆகையினால், முற்றிலுமாக ஆதிதிராவிடர்களாக இருப்பதால், அரசு இதை மறுபரிசீலனை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாணவ, மாணவியர்களுடைய கருத்தை, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

10–

பேருந்து பணிமனை

***9681**–**திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருப்பத்தூர் தொகுதியில், சிங்கம்புணரி நகரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய அரசுப் போக்குவரத்துப் பணிமனை துவக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் கோரியுள்ளது போன்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கே.கே. உமாதேவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகமாக இருந்து, மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகமாக, காரைக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் சிங்கம்புணரியில் பணிமனை உருவாக்குவதற்காக, இடங்கள் எல்லாம் பார்க்கப்பட்டன. திருப்பத்தூரிலிருந்தும், பொன்னமராவதி கிளையிலிருந்தும் கிட்டத்தட்ட 15–க்கும் மேற்பட்ட பேருந்துகள் வந்து போகின்றன. அரசின் செலவினத்தைக் குறைக்கின்ற வகையில், ஒரு பணிமனை உருவாக்குவதற்கு அம்மாவின் அரசு முன்வருமா? அடுத்த ஆண்டிலாவது எடுத்துக்கொள்ள முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பல் 10–45

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு இப்போது வாய்ப்பில்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், அரசாணை எண் (டி) 61, போக்குவரத்துத் துறை, நாள் 9–9–1992–ன்படி, இனி வரும் காலங்களில் போக்குவரத்துக் கழகங்களின் தற்போதைய பணிமனைகளை முழுமையாகப் பயன்படுத்தும் வகையிலும், கட்டுமானத்திற்கான செலவுகளைக் குறைப்பதற்காகவும், ஒரு பணிமனையிலிருந்து மற்றொரு பணிமனைக்கு இடையேயுள்ள தூரம் 40 கிலோ மீட்டருக்குக் குறைவாக இருத்தல் கூடாது என்று வரையறுக்கப்பட்டுள்ளது. திருப்பத்தூர் பணிமனையிலிருந்து சிங்கம்புணரி நகர் 22.5 கிலோ மீட்டர் தூரத்திலேயே அமைந்துள்ளதால் சிங்கம்புணரியில் புதிய பணிமனை அமைக்க அவசியம் எழாத நிலை உள்ளது. மேலும், திருப்பத்தூர் பணிமனையிலிருந்து இயங்கும் சுமார் 10 பேருந்துகள் இப்பகுதியின் மக்களுடைய தேவையை நிறைவு செய்கின்றன. திருப்பத்தூர் பணிமனையிலிருந்து மொத்தம் 32 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதிலே 10 பேருந்துகள் சிங்கம்புணரிக்கு வந்து செல்கின்றன. சிங்கம்புணரி நகருக்கு மொத்தம் 29 பேருந்துகள் வந்து செல்கின்றன. அவற்றில் பொன்னமராவதியிலிருந்து 6 பேருந்துகளும், துவரங்குறிச்சியிலிருந்து 2 பேருந்துகளும், மேலூரிலிருந்து 7 பேருந்துகளும், நத்தத்திலிருந்து 4 பேருந்துகளும் வருகின்றன. போக்குவரத்துத் துறையிலிருந்து பல்வேறு பேருந்துகள் இங்கு இயக்கப்படுவதன் காரணமாக, தனித்தனியாக பல்வேறு டெப்போக்களிலேயிருந்து இயக்கப்படுவதன் காரணமாக, சிங்கம்புணரிக்கு என்று தனியாக, அதனைத் தலைமையிடமாகக் கொண்டு அங்கு புதிய பணிமனை (Bus Depot) அமைக்க அவசியமில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 11, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

11–

போக்குவரத்துத் தொழிலாளர் நலன்

***19354–திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் சார்பில் சேலத்தில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சேலத்தில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர் நலன் கருதியும், பொது மக்களுடைய நலன் கருதியும் கேட்கப்பட்ட கேள்வி. சேலம், நாமக்கல், திருச்செங்கோடு, சங்ககிரி ஆகிய நகரங்களில் கனரக வாகனங்கள் அதிக அளவில் உள்ளன. இந்த கனரக வாகனங்களை ஓட்டுபவர்கள், ஓட்டுநர் பயிற்சி மட்டுமே எடுத்து, உரிமம் பெற்று வந்து ஓட்டுகின்றார்கள். வாகனங்களின் தொழில்நுட்பத்தை அறியாதவர்களாக உள்ளனர். இதனால், வாகனங்களில் சிறிது பழுது ஏற்பட்டாலும், வாகனங்களை நடு ரோட்டிலேயே நிறுத்திவிடுகிறார்கள். இதனால் சாலை விபத்துகள் ஏற்பட்டு, பெரிதும் இழப்பு ஏற்படுகின்றது. எனவே, தொழில்நுட்பத்தை அறிந்துகொள்ள, சேலம் மாவட்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரியை வரும் ஆண்டில் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் பணியாளர்களின் குழந்தைகள் பொறியியல் பட்டப் படிப்புப் பயில